
We Shine Academy™
guiding you to get through
தினசரி நடப்பு நிகழ்வுகள்
Useful for
TNPSC,
POLICE,
BANK
Exams
ஜனவரி
20
20.01.2021
Happy New Year
2021
தினகரன்
தி இந்து
தினத் தந்தி
தினமலர்
தினமணி

# உலக செய்திகள்

We Shine Academy
Guiding you to get through

- 18 வயதை நிறைவு செய்யும் அனைவருக்கும் கட்டாய ராணுவ பயிற்சிகளை வழங்க வேண்டும் என இலங்கை பொது பாதுகாப்புதுறை அமைச்சர் சரத் வீரசேகர் வலியுறுத்தியுள்ளார்.

We Shine Online Classes

8939 144 344 | 8939 244 344

- சீனாவின் சைனோ.ஃ.பார்ம் உருவாக்கியுள்ள கரோனா தடுப்பூசியை பொது மக்களுக்கு செலுத்த பாகிஸ்தான் மருந்துகள் ஒழுங்காற்று அமைப்பு அனுமதி அளித்துள்ளது

# இந்திய செய்திகள்

We Shine Academy Guiding you to get through

- ஜனவரி 29ம் தேதி முதல் நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத் தொடர் தொடங்க உள்ளது. மத்திய பட்ஜெட் பிப்ரவரி 1ம் தேதி தாக்கல் செய்யப்பட உள்ளது. இந்த கூட்டத் தொடரில் கேள்வி நேரம் மற்றும் பூஜ்ஜிய நேர விவாதத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

- டிராகன் பழத்திற்கு கமலம் என பெயர் மாற்றம் செய்து குஜராத் அரசு உத்தரவிட்டுள்ளது. டிராகன் பழம் ஒரு தனித்துவமான தோற்றமும் சுவையும் கொண்ட வெப்ப மண்டல பழம் என்பது குறிப்பிடத்தக்கது.
  - குஜராத் மாநில முதல்வர் : விஜய் ரூபானி

We Shine Online Classes 8939 144 344 | 8939 244 344

- இந்தியாவில் தயாரிக்கப்படும் கரோனா தடுப்பூசிகளை பூடான், மாலத்தீவு, வங்கதேசம், நேபாளம், செஷல்ஸ் ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட உள்ளதாக மத்திய வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

- நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் பிறந்த தினமான ஜனவரி 23 ஆண்டுதோறும் தேசிய வலிமை தினமாக கடைப்பிடிக்கப்படும் என மத்திய கலாச்சாரதுறை அமைச்சர் பிரகலாத் சிங் படேல் அறிவித்துள்ளார்.
  - இந்த ஆண்டு நேதாஜியின் 125வது பிறந்தநாள் கொண்டாடப்பட உள்ளது. இதற்காக பிரதமர் மோடி தலைமையில் 85 பேர் கொண்ட உயர்நிலை குழு அமைக்கப்பட்டுள்ளது.

## ஜனவரி 23 முதல் ஆயுஸ்மான் சி.ஏ.பி.எ.ஃ.ப் திட்டம் (Central Armed Police Force):

- அஸ்ஸாமில் மத்திய துணை ராணுவப் படையினருக்கான ஆயுஷ்மான் சுகாதார திட்டத்தை மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா தொடங்கி வைக்க உள்ளார்.
  - சுமார் 10 லட்சம் வீரர்கள் இத்திட்டத்தின் மூலம் பயனடைவார்கள்

- வரையறுக்கப்படாத இடங்களில் மொத்த வியாபாரம் செய்தால் சம்பந்தப்பட்ட கடைகள் மீது நடவடிக்கை எடுக்க உள்ளாட்சி அமைப்புகளின் அதிகாரிகளுக்கு அதிகாரம் உள்ளது என உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
  - அதே போன்று, ஒரு வியாபாரி மொத்த வியாபாரம் செய்கிறாரா? சில்லறை வியாபாரம் செய்கிறாரா? என்பதை முடிவு செய்யவும் உள்ளாட்சி அமைப்பு அதிகாரிகளுக்கு அதிகாரம் உள்ளது. இந்த அதிகாரம் சந்தைக் குழுக்களுக்கு இல்லை என உத்தரவிட்டுள்ளனர்

## விடைபெற்றது வடகிழக்கு பருவமழை:

- தமிழகத்தை வளம் செழிக்க செய்யும் வடகிழக்கு பருவமழை காலம் அக்டோபர் முதல் டிசம்பர் வரை ஆகும். ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் இரண்டாவது வாரத்தில் வட கிழக்கு பருவமழை தொடங்குவது வழக்கம்.
  - ஏன் அதிகமழை:

    பசிபிக் பெருங்கடலில் தற்போது நிலவும் லாநினோ (பூமத்தியரேகை ஒட்டி பசிபிக் பெருங்கடலில் மேற்குபகுதி வெப்பமாகவும், கிழக்கு பகுதி குளிர்ச்சியாகவும் இருந்தால் லாநினோ எனப்படுகிறது) காரணமாக, மலைய தீபகற்பம் மற்றும் தெற்கு அந்தமான் கடல் பகுதியில் வெப்பநிலை அதிகமாக இருந்தது.

## அடையாறு புற்றுநோய் மருத்துவமனை தலைவர் டாக்டர் சாந்தா மறைவு:

- 1954-இல் இந்திய மகளிர் சங்கத்துடன் (டபிள்யு.ஐ.ஏ.) இணைந்து அரசு சாரா புற்றுநோய் மருத்துவமனை பதிவு செய்யப்பட்டு, கடந்த 67 ஆண்டுகளாகச் செயல்பட்டு வருகிறது. இந்தியாவின் முதல் பெண் மருத்துவர் முத்துலட்சுமி ரெட்டி யின் அழைப்பை ஏற்று 1954 முதல் அடையாறு புற்றுநோய் மருத்துவனையில் டாக்டர். வி.சாந்தா பணியாற்றத் தொடங்கினார்.

# நியமன செய்திகள்

We Shine Online Classes

8939 144 344 | 8939 244 344

- 46வது அமெரிக்க அதிபராக ஜோ பைடன் இன்று பதவியேற்கிறார். குடியரசு கட்சியை சேர்ந்த டொனால்ட் டிரம்பிற்கு எதிராக ஜோ பைடன் வெற்றி பெற்றார்.

# விளையாட்டு செய்திகள்

We Shine Academy
Guiding you to get through

- தென்னாப்பிரிக்க டி20 அணியின் கேப்டனாக ஹென்ரிச் கிளாசென் நியமிக்கப்பட்டுள்ளார்.

We Shine Academy Guiding you to get through

# மிக்க நன்றி

We Shine Academy
Guiding you to get through